MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :3 /Issue 3 / JULY 2025 E-ISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்
சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
MENMATHI KOVAI TAMIL MANDRAM
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# இரட்டைக் காப்பியக் கிளைக்கதைகளில் வாழ்வியல் நெறிகள்

**முனைவர் கோ.தர்மராஜ்,**
**உதவிப்பேராசிரியர், முதுகலைத் தமிழ்த்துறை,**
**ஆனந்தா கல்லூரி, தேவகோட்டை, சிவகங்கை.**

# Life Values in the Double Epic Branch Stories

**Dr.G.Dharmaraj,**
**Assistant Professor,**
**Department of Tamil, Ananda College,**
**Devakottai, Sivagangai.**

**ABSTRACT**

Tamil language has a rich literary and grammatical tradition and history dating back two thousand years. Tamil has a special feature that languages like Greek, Latin, Sanskrit do not have. In this way, the Tamil language never deviates from its unique character. Perungappiyams and Ainganchirungappiams are responsible for the birth of Tamil language. Of these, Silapathikaram and Manimekalai both exist as double copies.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :3 /Issue 3 / JULY 2025 E-ISSN 3049-3676 (Online)

Silapathikaram, known by various special names as Tamil's first copy, Muthamil copy, religious public copy, feminiya copy, national copy, prioritizes the lives of three people namely Kannagi, Golovan and Madhavi and also exemplifies the virtues to be followed in human life. Manimekalai is said to be the first religious and moral copy of the Tamil language. Manimegalai not only highlights the Buddhist concepts but also talks about hunger to be eradicated in the society. These scriptures are also interpreted with general principles applicable to all times. The research summary of this article is to bring out the life values of the people prevailing at the time of the emergence of double copies through its branch stories.

**Keywords**:

Life Values, Food, Dress, Chastity, Math's, Asceticism, Caste, Balling, Vilaiyattu, Traditions, Festivals, Rituals

## ஆய்வுச் சுருக்கம்

தமிழ் மொழி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே செம்மையான இலக்கிய, இலக்கணப் பாரம்பரியத்தையும் வரலாற்றையும் பெற்றமொழியாகும். கிரேக்கம், இலத்தின், சமஸ்கிருதம் போன்ற மொழிகளுக்கு இல்லாத சிறப்புதமிழ் மொழிக்கு உண்டு. அவ்வகையில் தமிழ்மொழி என்றும் தனது தனித் தன்மையிலிருந்து பிறழாது உள்ளது. தமிழ் மொழியின் பிறப்புக்கு காரணமாகப் பெருங்காப்பியங்களும், ஐஞ்சிறுங்காப்பியங்களும் உள்ளன. இவற்றில் சிலப்பதிகாரம், மணிமேகலை இரண்டும் இரட்டைக் காப்பியங்களாகத் திகழ்கின்றன.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :3 /Issue 3 / JULY 2025 E-ISSN 3049-3676 (Online)

தமிழின் முதல் காப்பியம், முத்தமிழ் காப்பியம், சமயப் பொதுக் காப்பியம், பெண்ணியக் காப்பியம், தேசியக் காப்பியம் என்று பல்வேறு சிறப்புப் பெயர்களைக் கொண்டு விளங்கும் சிலப்பதிகாரம் கண்ணகி, கோவலன், மாதவி என்ற மூவரின் வாழ்க்கையை முதன்மைப்படுத்தியுள்ளதோடு மனிதவாழ்வில் பின்பற்றவேண்டிய அறங்களையும் எடுத்துக்காட்டுகிறது. தமிழ் மொழியின் முதல் சமயக் காப்பியம் என்றும் அறநெறிக் காப்பியம் என்றும் மணிமேகலையைக் கூறுவர். மணிமேகலை பௌத்தசமயக் கருத்துக்களை எடுத்துரைப்பதோடு மட்டுமல்லாமல் சமுதாயத்தில் நீக்கவேண்டிய பசிப்பிணியைப் பற்றியும் கூறுகின்றது. இவ்விருகாப்பியங்களும் எல்லா காலத்திற்கும் ஏற்றவாறு பொதுவான நெறிகளைக் கொண்டு விளங்குகின்றன. இரட்டைக் காப்பியங்கள் தோன்றியகாலத்தில் நிலவிய மக்களின் வாழ்வியல் நெறிகளைக் அதன் கிளைக்கதைகளின் வாயிலாக வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் ஆய்வுச் சுருக்கம் ஆகும்.

**குறிப்புச் சொற்கள்**

வாழ்வியல் விழுமியங்கள், உணவு, ஆடை, கற்பு, கணிகையர், துறவு நிலை, குலமகளிர், பந்தாடுதல், விiயாட்டு, மரபுநிலை, விழாக்கள், சடங்குமுறைகள்

**முன்னுரை**

தமிழ் இலக்கியங்கள் விழுமியக் கட்டமைப்பில் செயல்படுகின்றன. சங்க இலக்கியங்கள் அகம், புறம் என்ற இரு நிலைகளில் பல்வேறு விழுமியங்களைப் பெற்றிருக்கின்றன. சங்ககால மக்களின் வாழ்க்கைமுறைப் பண்டையதாகவும் அறமுடையதாகவும் நீதி நெறிமிக்கதாகவும் அமைந்துள்ளதால் மக்களின் வாழ்வு நலமிக்கதாக விளங்கின.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :3 /Issue 3 / JULY 2025 E-ISSN 3049-3676 (Online)

கிளைக்கதைகளில் விழுமியத்தின் உண்மைகளை நன்கு புரியும் வகையில் அமைத்துப் படைப்புகள் சிறக்க வழிவகை செய்கின்றன. விழுமியம் பலநிலைகளில் மாறுபட்டாலும் அவற்றில் வாழ்வியல் விழுமியங்கள் என்றும் நிலைபெற்று விளங்கும். இத்தகைய வாழ்வியல் நெறிகளை இரட்டைக் காப்பியக் கிளைக்கதைகளில் அமைந்துள்ளவற்றை ஆராய்ந்து வெளிக்காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## விழுமியம்

'விழுமியம்' என்ற சொல் சிறந்த 'மேன்மையான' என்று பொருள்படும். 'மதிப்புகள்' என்ற சொல் 'Values' என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழ் நிகராக கையாளப்படுகிறது. இதனை 'மதிப்பீடுகள்' என்று மொழிவர். ஆனால் 'மதிப்பீடு' என்ற சொல் 'Evaluation Review' என்னும் கருத்துப்படிவங்களைக் குறிப்பது. ஆனால் 'விழுமியம்' என்றாலே அது சிறந்ததை மட்டுமே குறிக்கும். சிறந்ததல்லாத எதுவும் 'விழுமியம்' என்ற சொல்லின் பொருளுக்குள் இடம்பெறாது. எனவே தான் நேர் மதிப்புகள் எதிர் மதிப்புகள் இரண்டையும் உள்ளடக்கிய 'மதிப்புகள்' என்ற பொதுச்சொல் 'Values' என்பதற்கு நிகராகத் தோன்றிய சொல்லாகும்.

## வாழ்வியல் நெறிகள்

நற்செயல்களில் வெளிப்படும் பண்புகள் வாழ்க்கைக்கு முன்மாதிரிளாக அமைகின்றன. அத்தகையப் பண்புகள் விழுமியம் என்றுபெயர் பெற்று நிலைத்து விடுகின்றன.

வாழ்வியல் என்பது வரையறையில்லா உயிரோட்டங்களின் உணர்வாகிறது. இறைவன் படைத்த பொருளெல்லாம் படைத்த வண்ணம் இருக்க மனிதன் மட்டும் படைத்ததன் பொருளுணர்ந்து உயர்ந்து விளங்குகிறான்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :3 /Issue 3 / JULY 2025 E-ISSN 3049-3676 (Online)

எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்பதைவிட இப்படித்தான் வாழவேண்டும் என்று தனக்குள் ஒரு கட்டுப்பாடான சமுதாயப் பின்னணியைக் கொண்டுவிளங்கினான்.

**"மக்கள் தாமேஆறறிவுயிரே"** (Ilampurannar , 2011)

என்ற தொல்காப்பிய வரையறைப்படி மனிதன் ஆறாவது அறிவான பகுத்தறிவு கொண்டு வாழ்வியலைச் செம்மைப்படுத்திக் கொண்டான். இதனை சாமி.சிதம்பரானார்,

**"வாழ்க்கை சட்டதிட்டம், இனக்கட்டுப்பாடு, பழக்கவழக்கம், பண்பாடு, ஒழுக்கமுறை என்பனவெல்லாம் நன்மை தீமைகளைப் பகுத்தறியும் பகுத்தறிவாகிய ஆறாவது அறிவு மக்களினத்திற்கே உரிய தனியியல்பாகும். இத்தகைய இயல்புடைமையே மற்றைய உயிர்களினின்றும் மக்கள் ஒருபடி உயர்நிலையில் இருந்ததற்குக் காரணமாகும்"** (Samy.Chidambaranar, 2008) என்று கூறுகின்றதை அறியமுடிகிறது.

மனித சமூகம் தான் வாழ்ந்த காலத்தின் சுவடுகளைப் பதிப்பித்து கொண்டும் எதிர்காலச் சமூகத்திற்கேற்பத் தன்னைப் புதுப்பித்துக் கொண்டும் வாழும் பான்மையை அழகியல் நோக்கத்தோடு அனுகினால் 'விழுமியங்கள்' என்ற செவ்விய சொல்லின் விளக்கங்கள் புலப்படும். **"ஒரு தனிமனிதன் பிறரிடமிருந்து எந்தெந்தப் பண்புகளை எதிர்பார்க்கிறானோ அந்தப் பண்புகளுக்குத் தானுட்பட வேண்டும் என எண்ணும்போது அந்தப் பண்புகள் அவன் பின்பற்ற வேண்டிய மதிப்புகளாக மாறிவிடுகின்றன. பிறர் உனக்கு எதைச் செய்யவேண்டுமென்று நீ நினைக்கிறாயே அதை நீ பிறருக்குச் செய்யவேண்டும் என்பது பைபிளின் வாக்கியம் நமது வாழ்வியல் விழுமியங்களுக்கு ஆதாரமாகிறது"** (Vedatri Maharishi, 2002) என்று

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :3 /Issue 3 / JULY 2025 E-ISSN 3049-3676 (Online)

கூறுவதிலிருந்து ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்க்கையைச் சீராக அமைத்துக் கொள்ள ஏற்படுத்திக் கொண்ட ஒழுக்கங்கள் வாழ்வியல் நெறிகளாக மதிப்பு பெறுகின்றன.

## இரட்டைக் காப்பியக் கிளைக்கதைகளில் வாழ்வியல் நெறிகள்

### உணவு

மனிதனின் அடிப்படைத் தேவைகளளில் முதன்மையாகக் கருதப்படுவது உணவு. மணிமேகலை இதனை,

**“மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே”** (Pulyurkesikan , 2010)

என்கிறது. உணவு பழக்கம் மனிதனுக்கு மனிதன், சமுதாயத்திற்குச் சமுதாயம் வேறுபடுகிறது. உணவு மட்டுமின்றிப் பொருள்களும், உண்ணும் முறையும், சமைக்கும் பாங்கும் தனிப்பட்டவையாக அமைகின்றன. காப்பிய ஆசிரியர் உணவுப் பழக்கங்களைச் சமுதாய உணர்வோடு குறிப்புப் பொருள்களைப் படைத்துச் செல்கின்றார். திருமண நிகழ்வுக்குப் பின் உணவளித்து வந்தோரை மகிழச் செய்வது சமுதாய இயல்பு ஆகும். இதனை,

**“உழுந்து தலைப் பெய்த”** (Pulyurkesikan , 2010)

எனும் அகநானூற்று பாடலடி உணர்த்துகின்றதை அறியமுடிகிறது.

சிலப்பதிகாரத்தில் மக்களின் அன்றாட உணவு பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. அங்காடிகளையும் கடைத்தெருக்களையும் காட்டிய இளங்கோவடிகள் பூதங்களுக்கு படையல் இட்டு வழிபட்டதைச் சுட்டியுள்ளார்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :3 /Issue 3 / JULY 2025 E-ISSN 3049-3676 (Online)

புகார் நகரில் உணவுப் பண்டங்களை விற்கின்ற நிலையினை,

**“பால்வகைத் தெரிந்த பகுதிப் பண்டமொடு**
**கூலம் குவித்த கூல வீதியும்**
**காழியும் கூவியர் கள்நொடை யாட்டியர்**
**மீன்விலைப் பரதவர் வெள்ளுப்பு பநர்**
**பாசவர் வாசவர் பல்நிண வினைஞரொடு**
**ஓசுநர் செறிந்த ஊன்மலி இருக்கையும்”** (Venkatasamy Natar, 2005)

என்று சைவ, அசைவ உணவுகளைப் பட்டியலிடுகின்றதைக் குறிக்கின்றது. இந்திர விழா ஊர் எடுத்த காதையில் காவல் பூதத்தின் கோயில் வாயிலில் அமைந்துள்ள பலிபீடிகையில் எள்ளுருண்டை, நிணச்சோறு, பூ, நறும்புகை, பொங்கல் போன்றவற்றைப் படைத்து வழிபட்டனர். மேலும் அழற்படு காதையிலும் வருணப் பூதங்களுக்கு உணவு படைத்தல் எனும் விழுமியப் பண்பு உள்ளதனை அறியமுடிகிறது.

மனித நாகரிகத்தின் சின்னமாக விளங்குவது ஆடை ஆகும். இது மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றாகும். தட்ப வெட்ப நிலைக்கேற்ப உடற்பாதுகாப்பிற்கு ஆடை அணிதல் இன்றியமையாததாகும். கலை உணர்வையும், பொழுதுபோக்கினையும் மனித மனம் விரும்பியதால் அதற்குத் தகப் பஞ்சும், பட்டும் உருவாயின. தொழிலுக்கும் இடத்திற்கும் ஏற்றவாறு நிறமும், உடுத்தும் உடையும் மாறுபடுகின்றன. சூழ்நிலைக்கேற்ப ஆடை உடுத்தப்படுகின்றன. இதில் பெண்களுக்கு தனி ஆடை, ஆண்களுக்கு தனி ஆடை என்று உருவாயின.

திருமணம் நடைபெறும் பொழுது அதிக மதிப்புள்ள ஆடை அணிவார்கள்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :3 /Issue 3 / JULY 2025 E-ISSN 3049-3676 (Online)

சிலப்பதிகாரத்தில் ஆடை பற்றிய செய்தி வஞ்சின மாலை காதையில் ஒரு கோடிப் புடவையை உடுத்துக் கொண்டு பெண் ஒருத்தி திருமணம் செய்து கொண்டதை அறியமுடிகிறது. இவ்ஆடை கண்ணகியின் திருமணத்தில் அமையவில்லை. கிளைக்கதையில் கற்புடைய மகள் ஒருத்தி அணிந்த செய்திக் குறிப்பால் எடுத்துரைக்கிறது. கோவலனின் பிரிவுச் சூழலில் கண்ணகி மெல்லிய ஆடை அணிந்தவளாகவும் துன்பத்தில் மணிமேகலை அணியாமல் இருந்ததை சிலப்பதிகாரம் புலப்படுத்துகிறது. அசோகவனத்தில் சிறைப்பட்ட சீதை,

**“ஆவி அம் துகில் புனைவது ஒன்று அன்றி வேறு அறியாள்”**

(Gnansambandar, 2012)

எனும் கூற்றிலிருந்து துன்பச் சூழலில் பெண்கள் மென்மையான ஆடையினை அணிந்துள்ளது புலப்படுகிறது.

ஆடை இழத்தல் என்பது காதல், சாதல் என்ற இரு நிலைகளில் சுட்டப்படுகின்றது. இது மன நெகிழ்ச்சியையும் மன அழிதலையும் காட்டுவதோடு மட்டுமல்லாமல் நாணம் துறத்தலையும் வெளிப்படுத்துகிறது. ஆய்ச்சிர் குரவையில் கண்ணனை ‘அறுவை ஒழித்தான்’ எனவும் சுட்டியிருப்பது ஆடை இழத்தல் எனும் நிகழ்ச்சிக்குச் சான்றாகின்றன.

சிலப்பதிகாரம் பல்வேறு வகையான வண்ண ஆடைகளை இயம்பகிறது. பூதங்கள் வெண்மையான ஆடையினை அணிந்தள்ளதை,

**“நுரையென விரிந்த நுண்பூங் கலிங்கம்
புலராது உடுத்த உடையினள்”** (Pulyurkesikan , 2010)

என்று அந்தணப் பூதம் அணிந்த நரை போன்ற வெண்மையான ஆடையினைச் சிலப்பதிகாரம் உணர்த்துகின்றதை அறியமுடிகிறது.

பொற்கொல்லனை மெய்ப்பையுடனும் நீலநிற ஆடையுடன் கள்வன் காட்டப்படுதலும் பருவத்திற்கு ஏற்ற ஆடை அணிந்த சமுதாயத்தில்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :3 /Issue 3 / JULY 2025 E-ISSN 3049-3676 (Online)

அவரவர்கள் வினைக்கேற்ப ஆடை அணிந்த நிலையினையும் இளங்கோவடிகள் வெளிப்படுத்தியுள்ளார். மேலும் ஆடை வணிகத்தை சிலப்பதிகாரம்,

**“பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்**
**செய்யப்பட்ட நுண்வினைக் காருகர் இருக்கை”**
(Pulyurkesikan , 2010)

என ஆடைகள் நெய்யப்பட்டதைக் காணமுடிகிறது. மேலும், மதுரையில்,

**“நூலினும் மயிரினும் நுழைநூல் பட்டினும்**
**பால்வகை தெரியாப் பன்னூ றடுக்கத்து**
**நறுமடி செறிந்த அறுவை வீதியும்”** (Pulyurkesikan , 2010)

என்று ஆடைகளுக்கு தனியாக வீதி இருந்ததை அறியமுடிகிறது. இவ்வாறு தமிழர் ஆடை அணிந்து கொள்ளும் முறைகளிலும் விழுமியப் பண்புகளோடு இருந்துள்ளதனை உணரமுடிகிறது.

**கற்பு**

கற்பு என்பது ஒழுக்கம் என்று பொருள்படும். இதனைத் தொல்காப்பியர்,

**“உயிரினும் சிறந்தன்று நாணே; நாணினும்**
**செயிர்தீர் காட்சிக் கற்பு சிறந்தன்று”** (Ilampurannar , 2011)

என்று உயிரை கற்பினும் நாணினும் சிறந்ததாகக் கூறுகிறார். சிலப்பதிகாரத்தில் மூன்று காண்டங்களிலும் கண்ணகியின் கற்பு சிறப்பாக எடுத்துரைக்கப்படுகிறது. கோவலனோடு கண்ணகி வாழ்ந்த பொழுது அவளின் அறக்கற்பும், கோவலன் கொலையுண்ட பொழு அவளின் மறக்கற்பும், சேரநாட்டில் அவளின் தெய்வீகக் கற்பும் இளங்கோவடிகள் எடுத்துரைத்துள்ளதை உணரமுடிகிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :3 /Issue 3 / JULY 2025 E-ISSN 3049-3676 (Online)

காப்பியத் தொடக்கத்தில் கண்ணகியை அறிமுகப்படுத்தும் இளங்கோவடிகள், தீதிலா வடமீன் திறம்இவள் திறம் என்று வடமீன் என்பது அருந்ததி நட்சத்திரம் கண்ணகியை அருந்ததி பொன்ற கற்புடையவள் என்பதையும் சாலியொரு மீன் தகையாள் என்றும் கூறுகிறார். கவுந்தியடிகள் கண்ணகியை இடைக்குல மடந்தை மாதரியிடம் அடைக்கலப்படுத்தும் போது கற்புடைய மகளிர் பிறந்த புகார் நகரத்திலேயே தானும் பிறந்ததாக கண்ணகி கூறுகிறாள்.

**“கற்புக்கடம் பூண்ட இத்தெய்வ மல்லது**
**பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால்”**

(Pulyurkesikan , 2010)

எனும் பாடல் வரியிலிருந்து கண்ணகியை கற்புடையவள், தெய்வம் போன்றவள் என்று கூறியுள்ளதனைக் காணமுடிகிறது.

மணிமேகலை காப்பியம் பத்தினிப் பெண்டிரின் பண்பைப் பற்றிக் கூறுகின்றது. பத்தினிப் பெண்டிர் கணவன் இறந்தான் என்ற செய்தியைக் கேட்டவுடன் இறந்து விடுவார்கள். கணவர் சாவைக் கேட்டவுடன் உயிர் விடாதவர்கள் தீ மூட்டி அந்தத் தீயிலே புகுந்து உயிர் விடுவார்கள். இப்படித் தீக்குளித்து உயிர் துறக்காதவர்கள் கைம்மை நோன்பை மேற்கொள்ளுவர். இறந்த பின். கணவன் அடைந்திருக்கும் உலகிலே சென்று அவனுடன் அடையவே கைம்மை நோன்பு மேற்கொண்டு உயிர் வாழ்வார்கள். இவை பத்தினிப் பெண்டிரின் இயல்பாகக் கருதப்படுகிறது.

**“காதலர் இறப்பின் கனைஎரி பொத்தி**
**ஊதுவலைக் குருகின் உயிர்த்து அகத்து அடங்காது**
**இன்உயிர் ஈவர்; ஈயார் ஆயின்**
**நல்நீர்ப் பொய்கையின் நளிஎரி புகுவர்**
**நளிஎரி குஅர் ஆயின் அன்பரோடு**
**உடன்உறை வாழ்க்கைக்கு நோற்றுஉடன் படுவர்**
**பத்தினிப் பெண்டிர்”** (Pulyurkesikan , 2010)

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :3 /Issue 3 / JULY 2025 E-ISSN 3049-3676 (Online)

என்ற பாடல் வரிகளின் வழியே கோவலன் இறந்த செய்தியைக் கேட்டதும் மாதவி வருந்தித் துறவு பூண்டாள் எனும் கருத்தினை அறியமுடிகிறது.

**கணிகையர்**

கணிகையர் என்போர் ஆடல் பாடல்களில் சிறந்தவர்களாகத் திகழ்ந்தனர். சிலப்பதிகாரம் கணிகையர், காவற்கணிகையர், ஆடல் மகள், ஆடற் கூத்தியர், பூவிலை மடந்தையர், மங்கலத் தாசியர், வம்பப்பரத்தை, கடைகழி மகளிர், நாடக மடந்தையர், பண்ணியல் மடந்தையர் என்றெல்லாம் கணிகையரைக் குறிக்கின்றது. பரத்தையர் இருந்த வீதி ‘இருபெரும் வீதி’ எனப்பட்டது. தவத்தோராயினும் வண்டு போன்ற காமகராயினும் காம வயப்பட்ட புதியவராயினும் கணிகையர் வீதியைக் கண்ணுற்றால் அங்கேயே தங்கிச் செல்லத் தூண்டும் தன்மையுடையவர்களாக இருந்தனர்.

மதுரை வளமிக்கதாக இருந்தமையாள் ஆடவர்கள் கணிகையரை நாடிச் சென்று இன்பமாக பொழுது போக்கினர். இதனை,

> **காவற் கணிகையர் ஆடற் கூத்தியர்**
> **பூலை மடந்தையர் ஏவற் சிலதியர்”** (Pulyurkesikan , 2010)

எனும் பாடல்வரிகள் உணர்த்துகின்றதைக் காணமுடிகிறது. கணிகையர் போன்றோர் புகாரின் பட்டினப்பாக்கத்தில் வாழ்ந்துள்ளனர். அரசர், வணிகர் போன்ற பெருமக்கள் வாழ்விடங்களிலும் கணிகையர் வீதி அமைந்தள்ளது புலனாகிறது. சமுதாயத்தில் உள்ள ஆண்கள் கணிகையரை நாடியதற்குக் காரணம் அப்பெண்களின் அழகும், ஆடல், பாடல் போன்ற கலைகளுமேயாகும். இக்கலையே கோவலனும் மாதவியை நாடி வாழ்வதற்கு முதற்காரணமாக இருந்தது எனலாம்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :3 /Issue 3 / JULY 2025 E-ISSN 3049-3676 (Online)

**“இசையிலும் கூத்திலும் வல்ல பொது மகளிர் நாளடைவில் கணிகையர் என்ற பதவி பெற்றனர். அவர்கள் பொருளை பெற்று இன்பத்தையும் துன்பத்தையும் அளித்துள்ளனர்”** (Samy Chidambaranar, 2008) என்று கூறுவதிலிருந்து கணிகையர்களின் வாழ்வியல் விழுமியப் பண்புகளை உணரமுடிகிறது.

## துறவு நிலை

சிலப்பதிகாரம், மணிமேகலை இரண்டிலும் பெண் துறவிகள் இருந்திருக்கின்றனர். துறவிகள் நாட்டில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சிகளையும் பற்றி அறிந்தவர்களாகவும் அறிவுக்கூர்மை உடையவர்களாகவும் நாட்டைப் பற்றி அறிந்தவர்களாகவும் விளங்கினர். கோவலனும் கண்ணகியும் மதுரை செல்லும் செய்தியை அறிந்து கவுந்தியடிகளும் உடன் செல்கின்றனர். மதுரைக்குச் செல்லும் வழிகளின் இயல்புகளைக் கூறுவதிலிருந்து துறவுநிலையில் இருந்தாலும் அறிவுக்கூர்மை மிக்கவர்களாகவும் உலக அனுபவங்களை அறிந்தவர்களாகவும் இருந்ததைக் காணமுடிகிறது.

பெண் துறவியாக இருந்தாலும் இறைவனை வழிபடுதலே தங்கள் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளனர். கண்ணகிக்கும் கோவலனுக்கும் ஏற்பட்ட துன்பத்தை எண்ணி உண்ணா நோன்பிருந்து தன் உயிரைப் போக்கிக் கொள்வதிலிருந்து துறவியர்களின் உயர்நிலையை அறியமுடிகிறது. கோவலன் கொலையுண்டதையும், கண்ணகி மறைந்ததையும் மாடலன் வழியாக அறிந்து மாதவி அவ்வவலத்திற்கு தானே காரணமென்று வருந்தகிறாள். மாதவி கோவலன் இறப்பால் காதலனோடு கலையையும் துறந்தாள். இறுதியில் மாதவி துயரத்தின் விளிம்பிற்கே சென்று துறவு வாழ்க்கை ஏற்கிறாள். கணிகையர் கோலத்தை தன் மகள் மணிமேகலை காணக் கூடாதுதென்று அவளையும் துறவியாக்கி விடுகிறாள்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :3 /Issue 3 / JULY 2025 E-ISSN 3049-3676 (Online)

இதனைக் கண்ணகி கோயிலில் மாதவியின் தோழி அரற்றும் போது அறியமுடிகிறது. இதனை,

**"போதியின்கீழ் மாதவர்முன் புண்ணியதா னம்புரிந்த**
**மாதவி தன்துறவும் கேட்டாயோ தோழீ**
**மணிமேகலை துறவும் கேட்டாயோ தோழீ"**

(Pulyurkesikan , 2010)

என்று இளங்கோவடிகள் கூறுகின்றது மனங்கொள்ளத்தக்கதாகும்.

துறவறம் பூண்ட பின்னும் கோவலனை நினைக்கும் போது அன்பு நிலை மேம்படுகிறதென்பதை,

**"காதலன் உற்ற கடுந்துயர் கேட்டுப்**
**போதல் செய்யா உயிரொடு நின்ற**
**பொற்கொடி மூதூர்ப் பொருளுரை இழந்து**
**நற்றொடி நங்காய் நாணுத் துறந்தேன்"** (Pulyurkesikan , 2010)

என்று மணிமேகலை பாடல்வரிகள் பறைசாற்றுகின்றதை உணரமுடிகிறது.

**குலமகளிர்**

குலமகளிர் இல்லறக் கடமைகளைத் தங்களின் உயிர்மூச்சாகக் கருதுகின்றனர். கணவன் தன்னைவிட்டுப் பிரிந்து புறஒழுக்கத்தில் ஈடுபட்ட செயல், தன்னை வருந்திய போதும், கணவனைப் பற்றியோ, தன் கணவன் நாடியிருக்கும் கணிகையைப் பற்றியோ இகழ்ந்து ஏதும் கூறாத நிலை சிலப்பதிகாரத்தில் காணமுடிகிறது. தன் பிரிவாற்றாமையைத் தோழியிடத்துக் கூறமுடியாத நிலையிலிருந்து தனக்கேற்பட்ட தன்பத்தைத் தானே ஏற்று கொண்டும் தன் துன்பத்தைப் பிறரிடம் கூறி அவர்களைத் துன்பத்திற்கு ஆளாக்காத இயல்பும் குலமகளிரிடையே இருந்த நற்பண்பைக் காட்டுகின்றது. இதனை,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :3 /Issue 3 / JULY 2025 E-ISSN 3049-3676 (Online)

**“முந்தை நில்லா முனிவு இகந்தனனா**
**அற்புளம் சிறந்தாங்கு அருண்மொழி அளைஇ**
**எற்பா ராட்ட யான் அகத்து ஒளித்த**
**நோயும் துன்பமும் நொடிவது போலும்என்**
**வாய்அல் முறுற்கு அவர் உள்ளகம் வருந்தப்**
**போற்ற ஒழுக்கம் புரிந்தீர்”** (Pulyurkesikan , 2010)

என்ற கண்ணகியின் கூற்றின் வழி இளங்கோவடிகள் எடுத்துரைகின்றார். மேலும் பிரிந்து சென்ற கணவன், தன்னிடம் மீண்டும் வந்து சேரவேண்டும் என்பதற்காக கோட்டம் சென்று வழிபட்டு வந்த நிகழ்வினை சிலப்பதிகாரத்தின் வழியாக அறியமுடிகிறது.

## சிந்தாதேவி

ஆபுத்திரன் ஒரு நாள் நள்ளிரவில் தூங்கும் போது சிலர் வந்து வயிறுகாய் பெறும் பசி எங்களை வருந்தகிறது என்றனர். அதைக்கேட்டு ஆபுத்திரன் அவர்களது பசித் துன்பத்பத்தைப் போக்க முடியாமல் வருத்தப்பட்டான். அப்பொழுது நியமத்தில் உள்ள சிந்தாதேவி வெளிப்பட்டு வந்து இதனை வாங்கிக்கொள். நாடெல்லாம் வறுமையுற்றாலும் இவ்வோடு வறுமையுறாது எவ்வளவு எடுத்துக்கொடுப்பினும் இதில் உள்ள உணவு குறையாது வளரும் என்றுரைத்து ஆபுத்திரன் கையில் அட்சயப் பாத்திரத்தைக் கொடுக்கிறாள். அவன் அதனைப் பெற்று சிந்தாதேவியைப் பாராட்டி வணங்கி பாண்டிய நாட்டில் பசித்து வந்தோர் துயர்தீர்த்தான். இவன் கைப்பாத்திரமே பின்னாளில் மணிமேகலை கையில் வந்து சோழ நாட்டில் பசித்து வந்தோர் துயர்தீர்த்த அட்சயப்பாத்திரமாகும். இவ்வாறு பசித்து வந்தோரின் பசியைப்போக்கிய வாழ்வியல் பண்பினைக் காணமுடிகிறது.

## பந்தாடுதல்

வஞ்சி நகரப் பெண்கள் பந்தாடுவதில் ஆர்வம் கொண்டுள்ளனர்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM   INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :3 /Issue 3 / JULY 2025   E-ISSN 3049-3676 (Online)

பாண்டிய மன்னனை புகழ்ந்துப் பாடிக்கொண்டே அவர்கள் பந்தாடினர் என்பது அறியப்படுகின்றது.

பந்தாடிய போது அவர்கள் பாடிய பாடல் கந்துவரி எனப்பட்டது. தெய்வம் ஏறப்பெற்ற சாலினிக்குப் படைத்த படையல் பொருள்களுள் பத்தும் ஒன்றாக இடம்பெறுகிறது. சங்க இலக்கியத்திலும் மகளிர் பந்தாடிய செய்திகளை அறியலாம். சிலப்பதிகாரத்தில் கந்துவரி எனும் பகுதியில் அறியமுடிகிறது.

**முடிவுரை**

- மனிதன் எண்ணம், ஆசை, சிந்தனை போன்று பல்வேறு கருத்தாக்கங்களை வெளிப்படுத்தும் ஓர் ஒப்பற்ற கருவி மொழி. மொழி சமுதாயத்தின் அடிப்படை ஆதாரமாக விளங்குகிறது. மனிதனின் சிந்தனைக்கும் உணர்வுக்கும் கற்பனைக்கும் விருந்தாக இலக்கியம் அமைந்துள்ளது.
- காப்பியக் கிளைக்கதைகள் கதை நிகழ்விற்குத் துணையாகவும், சில காப்பியத் தலைவனின் பண்பை வெளிப்படுத்துவதற்கும் காப்பியப் புலவன் உலகிற்கு உணர்த்த விரும்பும் அறத்தைப் புலப்படுத்துவதற்கும் துணைமாந்தர்களின் சிறப்பினைக் காட்டுவதற்கும் களைக்கதைகள் பயன்படுத்தப்பட்டுள்ளதனை அறியமுடிகிறது.
- காப்பியக் கிளைக்கதைத் துணைப்பாத்திரம் அறிமுகத்திற்கும், அத்துணைப் பாத்திரத்தின் வாழ்க்கைப் பின்னணியைக் காட்டுவதாகவும் கிளைக்கதையின் வழியாக காப்பியக் கருத்தான ‘ஊள்வினை உறுத்து வந்த ஊட்டும்’ என்ற கருத்தை வெளிப்படுத்துவதாக அமைந்தள்ளதைக் காணமுடிகிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :3 /Issue 3 / JULY 2025 E-ISSN 3049-3676 (Online)

- தமிழில் ஆடையணியாதவர்களும் அமணர்கள் என்ற பொருளில் அழைக்கப்பட்டு வந்தது. அச்சொல்லே பின்னர் சமணர் என மாறியதை அறிந்துகொள்ளமுடிகிறது.
- ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்க்கையைச் சீராக அமைத்துக் கொள்ள ஏற்படுத்திக்கொண்ட ஒழுக்கங்கள் வாழ்வியல் விழுமியங்களாகக் கருதுவதை உணரமுடிகிறது.
- துறவிகளாக கூறப்படும் கவந்தியடிகளும் அறிவுக்கூர்மை மிக்கவர்களாக திகழ்வதையும் பெண்கள் துறவியாக இருப்பதையும் அறிந்துகொள்ள முடிகின்றது.
- இரட்டைக் காப்பியத்தில் உயர்ந்ததாக கருதப்படும் உணவு, உடை, கற்பு, துறவு போன்றவற்றை அறியமுடிகிறது.

**References**


- Ilampurannar (U.A.), 2011 Department of Archaeology, Sharadha Publishing House, Chennai.
- Chidambaranar.Samy, 2008, Silapathikarat Tamil Nadu, Knowledge Publishing House, Chennai.
- Vedatri Maharishi, 2002, Values of Life, Vedatri Publishing House, Erode.
- Gnansambandar. 2012, A.S, Kamparamayana Sundara Kandam, NCBH, Chennai.
- Venkatasamy Natar.N.MU, 2005, Silapathikaram, Ramaiah Publishing House, Chenai.
- Puliyurkesikan (U.A.), 2010, Silapathikaram, Srisenpakha Publishing House, Chennai.
- Pulyurkesikan (U.A.), 2010, Manimekalai, Srisenpaka Publishing House, Chennai.
- Pulyurkesikan (U.A.), 2002, Akananoor. Bari Station, Chennai